முடியும். அப்படிக் கொடுக்க முடியுமா என்பதைப் பற்றி அறிவதற்காகத் தான் இன்றைக்கு இந்திய அளவிலே, ஒரு குழுவை—என்னுடைய, தமிழ்நாடு உணவு அமைச்சருடைய தலைமையிலே—மத்திய அரசு அமைத்திருக்கிறது. அதுபற்றிய கருத்துக்களை இப்போது மாநிலங்களிடத்திலிருந்தும், அரசியல் கட்சிகளிடத்திலிருந்தும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அது முடிந்த பின்பு ஒரு முடிவு எடுக்கலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் வசதியானவர்கள் வாங்காமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதை யாரும் எழுதிக் கொடுக்க முன்வரவில்லை. எங்களுக்கு அரிசி வேண்டாம் என்று எழுதிக் கொடுப்பதற்கு பல. பேர்கள் முன்வரவில்லை. அவர்கள் உபயோகிக்கவில்லை என்று சொன்னால், வேறு யாருக்காவது, அந்த வீட்டிலே வேலை செய்பவர்கள் யாருக்காவது அதைக் கொடுத்து விடுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 355, செல்வி எல். சுலோசனா, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

355—

வனப்பொருட்களை கூட்டுறவுச் சங்கம் மூலம் விற்பனை செய்தல்

* 10036—செல்வி எல். சுலோசனா :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மலைவாழ் மக்கள் மற்றும் ஆதிவாசிகள் மலைப் பகுதிகளிலே சேகரிக்கின்ற வனப்பொருட்களை கூட்டுறவுச் சங்கம் மூலம் விற்பனை செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்போது மலை வாழ் மக்கள் மற்றும் ஆதிவாசிகள் மலைப்பகுதிகளில் சேகரிக்கின்ற வனப் பொருட்கள் பெரும்பாலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே விற்பனை செய்யப்படுகின்றன.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதியிலே கூட்டுறவுச் சங்கம் அமைத்தால், மலைவாழ் பெண்களுக்கு வனப் பொருட்களை

சுத்தம் செய்தல் போன்ற வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு. எனவே, மலைப் பகுதியிலே கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மலைப் பகுதிகள் நிறைந்து இருக்கிற சேலம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, பெரியார், நீலகிரி, வட ஆற்காடு—அம்பேத்கார், தென் ஆற்காடு, மற்றும் திருவண்ணாமலை—சம்புவராயர், ஆகிய மாவட்டங்களிலே மொத்தம் 18 பெரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்,—''லாம்ப் சொசைட்டிஸ்'' செயல்பட்டு வருகின்றன. இவைகளின் மூலமாகத்தான் அங்கே இருக்கின்ற ஆதிவாசிகளையும், மலைவாழ் மக்களையும் பயன்படுத்தி, அந்தப் பொருட்களை சேகரித்து, விற்பனை செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில் பல கிராமங்களில் மலைவாழ் மக்கள் வாழ்கின்றனர். அந்த மக்கள் பயன்பெற வனப் பொருட்களை விற்பனை செய்ய கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அந்த மலைப் பகுதியிலே அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாபுண்மிகு பேரவைத் தலைவர் : வினா எண். 356, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

356—

வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர் மருத்துவ மனையில் பெண் மருத்துவர்கள்

*11582—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு என்று உள்ள மருத்துவமனையில் போதிய பெண் மருத்துவர்கள் உள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?